உ
சிவமயம்




அராலிப்பதி

# அமரர் திருமதி இராசம்மா ஆனந்தன்

அவர்கள் சிவப்பேறெய்தியமை குறித்த

# நினைவு மலர்

**18.09.2000**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் நினைவில் –உன் நினைவலைகள்

மனைவியாய் வந்து அன்னையாய் மாறி
இறுதியில் என் மழலையாகி மறைந்துவிட்ட என் உயிரே!
நான் மூட்டிய கொள்ளியில் என் உயிரே ... நீ
எரிய இறுதிவரை பார்த்திருந்தேன்!
என் தாயே நான் எரிகின்றேன்
நீ மூட்டிய பாசத்தீயில், நினைவுத் தீயில், எரிகின்றேன்.
நான் மூட்டிய கொடுந்தீ.... என் உயிரே!
உன்னை இறுதிவரை எரித்தழித்ததம்மா ....
நீ மூட்டிய பாசத்தீ... அன்புத்தீ... நினைவுத்தீ.... இனி
நான் மிச்சமின்றி முடியும்வரை எரியுமம்மா....!

**– அன்புக் கணவன்**

## குலவிளக்காம் எங்கள் அன்பு அன்னையே

எல்லோர்க்கும் நல்லவளாய் எளிமைதவழ் வாழ்வினளாய்
இன்சொல்லால் எவரையும் தன்பாலீர்க்கும் பண்பினளாய்
வல்லவளாய் வையமதில் வாழ்வதனில் உயர்ந்தவளாய்
வாய்மையினால் நலமருளும் வள்ளண்மை மிக்கவளாய்
நல்லோர் இதயமதிலும் ஏற்றமுற இருந்தவளாய்
இவ்வுலகு மதிக்கும் நல்லவளாய் அம்மா
தொல்லுலகுநீத்து தூயஇறை மலர்ப்பாதம் சேர்ந்து
தூயவளாய் மேலவளாய் ஆனாள்காண் சகத்தீரே.

**– அன்புப் பிள்ளைகள்**
**மருமக்கள் – பேரப்பிள்ளைகள்**

## அமரர் இராசம்மா ஆனந்தன் அவர்களுக்கு
## எங்கள் அஞ்சலி

உரிமைக் குரலோன் உம் கணவன் கரம் கோர்த்து
உரித்தான சமூகத்தின் எழுச்சிக்கு உரமூட்டினீரே!
சீரிய பண்பாலும் அன்பாலும் உளம் கவர்ந்தீரே!
பூரித்துப் புகழுடன் உந்நாமம் என்றும் நிலைத்திடுமே!

**சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்**
**புனர்வாழ்வு –கல்வி அபிவிருத்தி நிதியம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி இராசம்மா ஆனந்தன்



மண்ணுலகில்
04 – 01 – 1945

விண்ணுலகில்
19 – 08 – 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

# பஞ்ச புராணம்

## தேவாரம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
யோதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப் பொருளாவது
நாதநாம நமச்சிவாயவே.

மாதர்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதோடு நீர் சுமந்தேந்திப் புகுவாரவர் பின் புகுவேன்
யாதும் சுவடுபடா மலையாறடைகின்ற போது
காதன் மடப் பிடியோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்

பொன்னார் மேனியனே புலித்தோலையரைக் கசைத்து
மின்னார் செஞ்சடை மேன் மிளிர் கொன்றையணிந்தவனே
மன்னே மாமணியே மழை பாடியுண் மாணிக்கமே
அன்னேயுன்னை யல்லாலினியாரை நினைக்கேனே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னை சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவதினியே.

பால் நினைந்து ஊட்டும் தாயினுஞ் சாலப் பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்தானரும்பி விதிர்விதிர்ந் துன் விரை யார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சய சய போற்றியென்னுங்
கை தான் நெகிழவிடேனுடை யா யென்னைக் கண்டு கொள்ளே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை கரையிலாக் கருணை மா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ்சிவனை திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங் குளிர வென் கண் குளிர்ந்தனவே.

ஒளிவளர் விளக்கேயுலப் பிலா வொண்றே உணர்வு சூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின்றிரண் மணிக் குன்றே சித்தத் துள்தித் திக்குந்தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத் தொண்டனேன் விளம்புமா விளம்பே

ஏகநாயகனை இமையவர்க் கரசை என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாய யகனைப் புயல்வணற் கருளிப் பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோக நா யகனை யன்றி மற்றொன்றும் உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற் கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைசிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

மன்னுகதில்லை வளர்கநம் பக்தர்கள் வஞ்சகர் போய கலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனியெல் லாம்விளங்க
வன்னருடை மடவாளுமை கோணடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறி தந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

மிண்டு மனத்தினர் போமின்கள்மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி ஈசற் காட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றுமென்றும் உள்ள பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறை சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

திருவும் கல்வியுஞ் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையை காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையை பேணுவாம்.

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி,
பேதியா வேகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப்பொதுநடம் போற்றி ! போற்றி!

உலகெலாமுணர்ந்து ஓதுதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மணி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்திலாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞான மொழி பேசுமுக மொன்றே
கூறு மடியார்கள் வினை தீர்க்கு முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருள வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே.

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனாய் வாழ்வினைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா ஞான சற்புண நேயா
ஒப்பிலா மாமணிக் கிரி வாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை

ஔவையார் அருளிச் செய்த

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமு மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியு மிலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ்ஞான
அற்புதம் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந்தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தெ னுளந்தனிற் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான்மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணை யினிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை யறுத்திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின்மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவி லுணர்த்திக்

குண்டலியதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தி னீரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக வினிதெனக் கருளிப்

புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லாமனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி என்செவியில்

எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத் தினுள்ளே சதாவிசம் காட்டிச்
சித்தத் தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சுகரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத்தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# திருவாசகம்

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மறுவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சி நீங்காதான் தாள்வாழ்க
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகி நின்றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப் பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தாற்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள் மகிழுங் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன் தாள்வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினை முழுது மோய உரைப்பனியான்

கண்ணுதலான் தன் கருணைக்கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத் தாவர சங்கமத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நு ண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்யானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன்இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன்தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச்செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்து அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான்இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள்கா ட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியானே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னையாட் கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நு ணுக்கரிய நு ண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுட ரொளியாய்ச் சொல்லாத நு ண்ணுயர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று சொல்லற்
கரியானைச் சொல்லித்திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சக்தி ஓம் ! ஓம் சக்தி ஓம் !!

உலகத்து நாயகியே எங்கள் முத்து மாரியம்மா
எங்கள் முத்துமாரியம்மா – எங்கள் முத்து மாரியம்மா
உன் பாதம் சரண் அடைந்தோம்
எங்கள் முத்துமாரியம்மா – எங்கள் முத்துமாரி
கலகத்தரக்கர் பலர்
எங்கள் முத்துமாரியம்மா – எங்கள் முத்துமாரி
கருத்தினுள்ளே புகுந்துவிட்டாள்
எங்கள் முத்துமாரியம்மா – எங்கள் முத்துமாரி
பலகற்கும் பலகேட்கும்
எங்கள் முத்துமாரியம்மா – எங்கள் முத்துமாரி
பயனொன்றும் இல்லையடி
எங்கள் முத்துமாரியம்மா – எங்கள் முத்துமாரி
நிலையெங்கும் காணவில்லை
எங்கள் முத்துமாரியம்மா – எங்கள் முத்துமாரி
நின்பாதம் சரணடைந்தோம்
எங்கள் முத்துமாரியம்மா – எங்கள் முத்துமாரி

ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஷுந்தரவதனி ஸுகுண மனோஹரி
மந்தஹாஸ முக மதிவதனி
சந்தன குங்கும அலங்காரமுடனே
தந்திடுவா யுந்தன்தரிசனே
நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வகையாயுன் புகழ்பாடிடுதே
தங்கச் சிலம்பு சலசலவென்றிட
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்கு மானந்தமுடன் புலிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய்
வேதங்கள் உன்னை வேண்டிப்பாடிட
விரும்பி சரஸ்வதி வீணை வாசித்திட
ஸதானந்த மான ஜோதிஸ்வரூபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ துர்க்கா அஷ்டகம்

இன்பநலன் அளிப்பவளை இனியனவே தருபவளை
அன்புடைய அன்னையவளை அருஞ்சிவனை மணந்தவளை
என்னுடைய இதயத்தே பொன்னுயிராய்இருப்பவளை
நன்மலரால் பூசித்தே நமோதுர்க்கா யென்றிடுவேன். 1

துங்கவெழிற் கரிமுகனைத் துர்ககைநீ யீன்றெடுத்தாய்
சங்கரனார் தாண்டவத்தில் சக்தியேநீ பங்கெடுத்தாய்
பொங்கிசினப் பேரரியில் பொருந்தநீ யிருந்திட்டாய்
தங்கிடுவாய் எங்குலத்தில் தவஒளியே துர்க்கையளே 2

இசை தந்து இல்வாழ்வின் இடர்நீக்கிக் காப்பவளே
விசையுடனே மணமாலை விருப்பமொடு அளிப்பவளே,
திசையெல்லாம் திருவிளங்கத் திருவடியால் நடந்தவளே,
அசைவற்ற பொருளதையும் ஆட்சிசெய்வாய் துர்க்கையளே! 3

வேண்டியன விரும்பியன வேண்டியவாறளித்திடுவாள்
காண்டிபத்தைக் கதையதனைக் காந்திமிகு சூலமதை
ஆண்டருளும் அன்னையவள் ஆட்சிசெய்ய ஏந்திட்டாள்
தூண்டாநல்மணிவிளக்கைத் தூயதுர்க்கைத் தாயென்போம் 4

உலகையிவள் ஈன்றெடுத்தாள் உடமைமிகத் தானளித்தாள்
கலகமிடும் கள்ளாக்கக் கலிமாய்த்துக் கவியிசைத்தாள்
திலகஒளி நுதலுடையாள் திருநிறைந்த வடிவுடையாள்
அலகில்நலம் அளிப்பவளை அன்னைஸ்ரீ துர்க் கையென்போம் 5

சுந்தரத்துக் கந்தனையே சுடர்கூட்டி ஈன்றவளார்?
விந்தைமிகப் பொங்கிடவே விளங்குநலம் தருபவளார்?
அந்தமொடு ஆதியின்றி அன்னையென வளர்ந்தவளார்?
சந்தமிகப் பொலிகின்ற சக்திஜதுர்க் கையென்போம் 6

செல்வமொடு செல்வாக்கைச் செயம்பெறவே தந்தவளை,
நல்லறிவும் நல்லொளியும் நல்லனவும் நிறைந்தவளை,
வெல்லுகின்ற வழியாளை செஞ்சுடரின் விழியாளைச்
சொல்மலரால் பூசித்துச் சொர்ணஒளி பெற்றிடுவோம்! 7

குமரிமுனை நிற்கின்ற குலவிளக்கே துர்க்கையளே!
சமயமதில் வழிகாட்டும் சண்டிகையே துர்க்கையளே!
சமரிட்டு சங்கடத்தைச் சங்கரித்த துர்க்கையளே!
இமயமுகில் துர்க்கையளே இணையடிகள் வாழியவே! 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கந்தர்சஷ்டி கவசம்

(தேவராய சுவாமிகள்)

காப்பு - நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை

குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன்அடி நெஞ்சே குறி

நூல் - நிலமண்டல ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாமத் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக சருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சவரண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
வணபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நீறென
வசர ஹணபவ வருக வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரர்குடி கெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும்தரித்து
நன்மிணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடை யதிருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள்முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல்தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தர்களெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கைகால் முறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்திக் குலட்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீ எனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரஹண பவனே சையொளி பவனே
திரிபுர பவளே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சினை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப்பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடள் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிப்
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர்அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணயங்குவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்துஅடி
அறிந்து எனதுள்ளம் அட்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றுனி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## திருமால் தசாவதாரக் காப்பு

மீனாட்சி சோதரனாம் மீனன் காக்க
மேதினியைக் காப்பவனே மேனி காக்க
தேனாட்சி முகில்வண்ணன் தினமும் காக்க
திருமாலே தடந்தோளின் வலிமை காக்க
வானாட்சி இந்திரர்க்கு வைத்தோன் காக்க
வையத்தில் பத்தாகிப் பிறப்போன் காக்க
கானாட்சி கொண்டவரின் கருத்தன் காக்க
கரியமணி வண்ணனெனைக் கருதிக் காக்க.

ஆமையென உருவாகி அளித்தோன் காக்க
அமுதமழை தருதிருமால் அன்னம் காக்க
சோமனது குளிர்ச்சியினைக்கொண்டோன் காக்க
சூரியனை வலமாகப்பெற்றோன் காக்க
காமுருநற் றோற்றமுடைக் கண்ணன் காக்க
காசினியோர் தவப்பயனாய் நின்றோன் காக்க
ஏமமென என்றென்றும் இனிதே காக்க
எந்தைதிரு மாலெனையே என்றும் காக்க.

யாகவடி வேனமென ஆனோன் காக்க
யாதுமெனக்கனிகின்ற ஆதி காக்க
போகவடி வானமு ராரி காக்க
புன்னகையின்மன்னனெனைப் பொருந்திக் காக்க
நாகவனை கொண்டவனென் நலமே காக்க
நல்வக்ர தம்ஸ்ட்ரம்பல் கொண்டோன் காக்க
ஆகமதில்அனைத்துலகும் காப்போன் காக்க
அனுதினமும் கனவிடையும் அவனே காக்க.

தூயநர சிங்கமெனும் துணைவன் காக்க
தொல்லைதரும் அல்லலிடைத் தொடர்ந்து காக்க
ஆயஅறம் அத்தனையும்அமைந்தோன் காக்க
அமைதிதரு அருளுடையோன் அமைந்து காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏயவெலாம் நல்கவல்ல எந்தை காக்க
எம்பெருமான் என்றுமெனை இனிதே காக்க
மாயனென மாதவர்கள் கொள்வோன் காக்க
மத்தகத்தைப் பிளந்தானென் சித்தம் காக்க.

வமவனனாய் வந்துபலி காத்தோன் காக்க
வளர்திரு விக்கிரம வள்ளல் காக்க
காமுருசீர் கணிகண்ணன் கலங்கா வண்ணம்
காட்சிதரு மணிவண்ணன் கனிந்துகாக்க
ஏமமதில் சாமமதில் என்றும் காக்க
என்னையக லாவண்ணம் எங்கும் காக்க
தோமெனவே நடமிடுதல் துணைவன் காக்க
தொசைக்கருணை மழைக்கொண்டால் தொடர்ந்து காக்க

இரேணுகையின் மகனான ரோஷம் காக்க
இணையருசீர்ப் பரசுடைய ராமன் காக்க
நாணொலித்துப் பகைமுடித்த நாட்டம் காக்க
நாளெல்லாம் வாழ்வேனென் நலமே காக்க
பாணிலத்தம் மலையிடத்தும் அலைவோன் காக்க
பனிக்கருணைப் பாசமலர் வண்ணன் காக்க
சேணிலத்தும் செருவிடத்தும் காப்போன் காக்க
செய்யதிருப் பரசுடை யோன் சிறக்கக் காக்க.

கலப்பையினைக் கரப்படையாய் கொண்டோன் காக்க
கவலைகளை நீக்கவல்ல கருணை காக்க
உளப்பகைகொள் துரியனுக்கும் உவந்தான் காக்க
உயர்ந்தபல ராமனென துறுதி காக்க
களப் பகையில் சினந்தெழுந்த காட்சி காக்க
கருந்திருமால் ஆவேச ஆட்சி காக்க
அளப்பரிய பெருஞ்சீர்த்தி அளிப்போன் காக்க
அரிநாமம் அறிவார்கள் ஆக்கம் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோதண்ட பாணியெந்தன் குலமே காக்க
குவலயமே தனதான குளிர்ச்சி காக்க
மூதண்ட கூடமெல்லாம் அளித்தோன் காக்க
முளரிமலர்த் தாளுடைய முதல்வன் காக்க
தீதண்டா வண்ணமெனைத் தினமும் காக்க
திருமகளின் கேள்வனே திருவைக் காக்க
நாதனென நயந்தளிக்கும் நலமே காக்க
நற்கருணைக் காகுத்தன் நன்மை காக்க.

குழலூதும் கோபாலன் கொள்கை காக்க
குலமாதர் துதிகொள்வோன் குளிர்ச்சி காக்க
அழலூடே மழையாகி அணைத்துக் காக்க
அருங்கருணை வள்ளலெனை அணுகிக் காக்க
பிழையேதும் வாராது பேணிக் காக்க
பீழையினை நீக்கியெனைப் பீடில் காக்க
மழைமேக மணிவண்ணன் மாண்பு காக்க
மலரடிகள்தந்தருளி மகிமை காக்க.

இவுளிதனில் கவசமுடன் வாளும் ஏந்தி
இனிவருமோர் கல்கியெனும் ஏந்தல் காக்க
செவிநு கரும் கனிகள்தரு மாலே காக்க
செஞ்சொலிலும் அஞ்சலென்றே கண்ணன் காக்க
அவதாரம் பத்துடையான் அன்பில் காக்க
அவதாரத் தவதாரம் ஆனோன் காக்க
நவமான மணிவண்ணன் நாளும் காக்க
நாரணனே காரணனே நலமே காக்க.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன விருத்தி மாலை
# அஸ்டலெட்சுமி வணக்கம்

## 1. தனலெக்ஷ்மி

பொங்கு தனக்கரத்தாள்பொற்புடைய சக்கரத்தாள்
எங்குநலம் தருகின்ற எழிற்கரத்துத் தாமரையாள்
தங்குகின்ற கமலத்தில்தளிரடிகள் தாம்வைத்தாள்
தங்கரத்தால் தண்மைதரு தனமகளே போற்றியம்மா.

## 2. ஆதிலெக்ஷ்மி

சோதிமிக வுடையாள் சோம்பற்ற மனமுடையாள்
தாதியரின் புடைசூழத் தாவிவரும் தார்மிகத்தாள்
பூதிமிகு மலரபய பூரணநல் வரதத்தாள்
ஆதியிலும் ஆதியளே ஆதித்திரு போற்றியம்மா!

## 3. தான்யலெக்ஷ்மி

எண்கரத்தில் ஏற்புடைய எழிற்படைகள் ஏற்றவளே
பண்புடைய பகவதியே பலகதையும் பெற்றவளே
கண்படைத்த பயனாகக் களிப்படைய வந்தவளே
மண்செழிக்கத்தானியநல் மணிதந்தாய் போற்றியம்மா!

## 4. வீரலெக்ஷ்மி

சூலமொடு அபயத்தாள் சூழ்ச்சியற்ற வரதத்தாள்
காலனவன் கால்நடுங்கு கதிர்ஒளியின் சக்கரத்தாள்
நீலத்திரை யமுதத்தாள் நீற்காநற் புகழுடையாள்
மாலவனார் மனமகிழும் வீரத்திரு பொற்றியம்மா!

## 5. கஜலெக்ஷ்மி

தடாகத்தாமரையாள்தண்மைமிகு தவவடிவாள்
அடாஅத் துயரமதை அழிக்கின்ற அருளடியாள்
விடாநற் றனமழையாள் விளங்கானைத் துதியடியாள்
படாகக் கரியிலர்வாள் பண்ணடிகள்போற்றியம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6. சந்தானலெக்ஷ்மி

அன்புடையாள் அறுகரத்தாள்அன்னையிலும் அன்னை யவள்
இன்புடையாள் கேடகத்தாள்இடர்நீக்கு வாளுடையாள்
மன்புகழின் மலர்க்கரத்தே மகவுடனே யாதுடையாள்
சந்தனத்தாய் சந்தானப் பெருக்குடையாய் போற்றியம்மா

### 7. விஜயலெக்ஷ்மி

வாளுடனே சாரங்கம் வார்புகழின் சுதர்சனமும்
ஆளுடைய கேடயமும் ஆண்டருளும் எண்கரத்தி
நாளுடனே நாற்புகழும் நாரணர்க்குத் தாமளித்த
தாள்மலரும் தனிவெற்றித் தாயேநீ போற்றியம்மா.

### 8. ஐஸ்வர்யலெக்ஷ்மி

நாற்கரத்து நாயகியாள் நாற்றிசையின் நல்வினையாள்
கார்மேகம் போல் தனத்தைக்காத்திடவே செய்திடுவாள்
நூற்புலவர் தம்முகத்தாள் நூதனத்தின் ஒருவடிவாள்
பாற்பணியும் அயிசுவரியப் பாவையளே போற்றியம்மா!

### பலன் மொழி

அட்டத்திரு மகளாய் அருள்வீசும் அன்னைபுகழ்
இட்டவெள்ளிமங்களத்தில்இருந்தபடி இரந்துரைப்பார்
துட்டதுயர் தொலைவேகும் துணிவுபுகழ் அருகாகும்
முட்டமுட்டப் பொருள்குவித்து முன்னின்று வாழ்ந்திடுவார்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல கலாவல்லி மாலை

## உள்ளக் கமலத்தில் உறைய வேண்டுதல்

வெண்டா மரைக்கன்றி நின் பதந் தாங்கவென்வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத்தகாது கொ லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.

## நற்கவி பாட நல்லருள் தருவாய்

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக்குன் றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே.

## கலைமகள் அருளிற் குளிக்க விரும்புதல்

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குறிக்கும் படிக்கென் று கூடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் காலப மயிலே சகல கலாவல்லியே.

## கல்வியும் வாக்கும் பெருகிடச் செய்வாய்

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே.

## நெஞ்சத் தடத்தினில் நிலவ வேண்டும்

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத்தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பண்ணும் பரதமும் நல்கிட வெண்டுதல்

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே.

### பாட்டும் பொருளும் பயனும் கூட்டுவாய்

பாட்டும் பொருளும பொருளாற்பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படநின் கடைக்கணல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.

### சொல்லின் வன்மை பெருகிட வேண்டுதல்

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே.

### சொற்கும் பொருட்கும் உயிராய்இருப்பவள்

சொற்கும பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே சகல கலாவல்லியே.

### மன்னர் தன்னையும் பணியச் செய்வாய்

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட, தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலாவல்லியே.

முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஸ்ரீ வைரவர் வணக்கம்

பரமனைமதித்திடாப் பங்கயாசனன்
ஒருதலைகிள்ளியே யொழிந்தவானவர்
குருதியுமகந்தையுங் கொண்டுதன்டமுன்
புரிதருவடுகனைப் போற்றிசெய்குவாம்.

### ஸ்ரீ ஆஞ்சநேயர் வணக்கம்

அஞ்சனை செவ் போற்றி! அநுமா! எம் ஜய போற்றி
நெஞ்சினில் இராம நாமம் நிறைந்திடும் நிமல போற்றி
சஞ்சலம் தவிர்ப்பாய் போற்றி! சற்குருநாதா போற்றி
தஞ்ச மென் நடைந்தோலை மும்பொழுதும் காப்பாய் போற்றி!

## நவக்கிரக வணக்கம்

#### சூரியன்

மித்திரா ரவியே மிடியினைத் தீர்ப்பாய்
வித்தகா பாஸ்கரா விரிசுடர் விண்ணவா
சித்தமே நினைத்திடச்செயம் தரு ஸ்ரீதரா
இத்திரை வலம் வரு இந்திரா போற்றியே.

#### சந்திரன்

சோமனே சுத்தனே சோர்விலாச் சோதியே
காமனைக் கரித்தவன் கலைமுடி தாங்கிய
நாமனே நகை மகநங்கையின் நாயகா
நேமனே நிறைநல நேசனே போற்றியே.

#### செவ்வாய்

மங்களக் குமரனே மணந்தரு சக்தியே
அங்காரக னெனும் அழகு செவ் வண்ணனே
பொங்கிட நலத்துடன் பொருள் நிலம் அளித்திடும்
எங்களின்இதயனே இன்பனே போற்றியே

#### புதன்

புண்ணியப் புதனே புகலெனப் பணிந்தேன்
கண்முனே கனிந்து நீ கருணையாய் ஒளிவிடு
பண்ணிடும் செயல்களின் பலனெனப் பல்நலம்
மண்ணினில் அருள்வாய் மலரடி போற்றியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரு

குருவெனும் பிரகஸ்பதி குறைகளைத் தீர்ப்பாய்
திருவொடு நலம்பலத் தினத்தினம் சேர்ப்பார்
பெருமன வியாழனே பெருந்தவ அந்தணா
நறுமலர்ப் பாதனே நம்பினேன் போற்றியே.

## சுக்கிரன்

கலைகளின்தந்தை நீ கண்ணில் ஒளியுநீ
நிலைதரும் வெற்றியின் – நித்தியத் தலைவன் நீ
மலைமகள்அடியவா மலர் தவழ் மார்பனே
தவத் தொளிச் சுக்கிர சந்ததம் போற்றியே.

## சனீஸ்வரன்

காகத்தின் மீதினில் கருணையாய் வருபவர்
சோகமே தீர்த்துச் சுகமது தருபவர்
மோகமும் மூடமும் மோசமும் தீர்ப்பவர்
வேதனே மந்தனே வேண்டினேன் போற்றியே.

## இராகு

சிம்ஹிகை மைந்தனே சிம்மத்தாள் அடியவா
தம்பதம் பணிபவர் தனித்துணை யானவா
வ்ம்புகள் தீர்த்து வளந்தரு சர்ப்பனே
நம்பினேன் நலந்தரு ராகுவே போற்றியே.

## கேது

செய்தபம் பனித்திடச்செயம்தரு தேவன் நீ
மெய்யினில் மெய்யுநீ மென்மையின்மென்மை நீ
பெய்மழை யெனவருள் பெருகவே பொழிந்திடும்
அய்யனே கேதுவே அரவனே போற்றியே.

## பலன்மொழி

நவநிதி நல்கிடும் நவக்கிரக மாலையைத்
தவத்தோடு நேமமாய் தனித்திருந் துரைத்திடின்
அவத்தோடு வறுமைகள்அழிபசி பிணிகளும்
சிவசிவ மறைந்திடும் செல்வமே நிறைந்திடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்டேஸ்வரர் வணக்கம்

பொன்னங்கடுக்கை முடிவேய்ந்த
புனிதறமைக்கு பொருளன்றி
மின்னுங்கலனாடைகள் பிறவும்
வேறுதனக் கென்றமையாமே
மன்னுந்தலைவன் பூசனையில்
மல்கும்பயனை யடியார்கள்
துன்னும்படி பூசனைகொள்ளுந்
தூயோனடித்தாமரை தொழுவாம்.

மனாதிகளுக் கெட்டாத பரமா னந்த
வாழ்வினையங் கோரிலிங்க மணலாற் கூப்பித்
தனாதிதயந் தனினின்றுந் தாபித் தான்பால்
தழைத்தவன்பா லாட்டவந்த தடுக்கத்தாதை
எனாதவன்ற னிருபதமு மழுவாற் றுண்டித்
திகழ்ந்தவனைப் பரபதத்து ளிருத்தித் தானும்
பினாகியரு ளடைந்தவிறற் சண்டே சன்தாள்
பிரசமல ரிறைதிறைஞ்சிப் பரசு வாமே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறையறங்கள் ஓங்க நற்றவம் வேள்ளி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரமதி இராசம்மா ஆனந்தன் அவர்களின் வாழ்க்கை நினைவு அலைகள்

இனத்தின் இருளகற்ற தன்னையே எரித்தொளி கொடுக்கும் அடலேறுகளால் வான்உயர் புகழ்கொண்ட யாழ்நகரின் மேற்புறத்தே ஆறுமைல்கள் கல் தொலைவில்.. நீர்வளமும் நிலவளமும் கொண்ட பசுமை மிகு வயல்களாலும், புனித ஆலயங்களாலும் சூழப்பட்ட எழில்மிகு சிறு கிராமமே அராலி எனும் சிறு கிரமமாகும்.

என்றுமே பூத்துக்குலுங்கி அழகுகாட்டும் இவ்வெழில் கிராமத்தில் – அன்று வாழ்ந்து வந்த முருகேசு சின்னம்மா தம்பதியினருக்கு *04.01.1945* இல் மகளாகப் பிறந்தவர் இராசம்மா என அழைக்கப்படும் முத்தம்மா அவர்கள்.

தன் ஆரம்பக் கல்வியை அராலிக் கிராமத்தில் உள்ள அராலி இந்துக் கல்லூரியிலேயே பெற்றுக்கொண்ட இராசம்மா அவர்கள், தன் இளமைக் காலத்தின்பெரும்பகுதியை தன்பெற்றோர்களுக்கும் சகோதரர்களுக்கும் சேவை செய்வதிலேயே அர்ப்பணித்துக் கொண்டார்.

*1965*ஆம் அண்டு ஆனி *19*ம் திகதி அவர் வாழ்ந்த அதே கிராமத்தில் வசித்து வந்த ஆனந்தன் எனும் திரு. திருமதி சபாபதி வள்ளியம்மை தம்பதியினரின் மகனை மணம் செய்து இல்லற வாழ்க்கையில் காலடி எடுத்துவைத்தார்.

இராசம்மா ஆனந்தன் தம்பதியினருக்கு நான்கு ஆண்களும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தனர். திரு. ஆனந்தன் அவர்கள் தன் நான்கு ஆண்பிள்ளைகளுக்கும் தன் மனைவியின் பெயரின் முற்பகுதியை இணைத்து இராசமோகன், இராசகுமார், இராசசேகர், இராசலிங்கம் எனப் பெயர் சூட்டியதன் மூலம் தன் மனைவியின் மேல் தனக்குள்ள பாசத்தை வெளிப்படுத்திக் கொண்டார். ஐந்தாவதாகப் பிறந்த பெண் குழந்தைக்கும்தன் மனைவியின் விருப்பப்படியே சுகந்தினி என நாமம் சூட்டினார். குழந்தைகளை வளர்ப்பதில் வாழ வைப்பதில் இராசம்மா அவர்கள் காட்டிய ஆர்வம், எடுத்த முயற்சிகள் நினைவு கூரப்பட வேண்டியவையாகும். அவரது நான்கு ஆண்பிள்ளைகள் கனடாவிலும் இவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் ஜெர்மனியிலும் இன்று சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களென்றால் அவற்றிற்கான அவரது பங்களிப்பு நினைவுகூரப்பட வேண்டியதாகும்.

இராசமோகனுக்கு பவானியையும் இராசகுமாருக்கு சியாமளாவையும் சுகந்தினிக்கு புலேந்திரனையும் திருமணம் செய்து வைத்துப் பேரப்பிள்ளைகளாக விதுஷா, அலெக்ஷன், கிருஷாந் ஆகியோரைக் கண்டு களித்த அம்மையார் தன் கடைசி மகன்களாகிய இராசசேகருக்கும் இராசலிங்கத்திற்கும் திருமணம் செய்து பார்க்கத் தயாராகும் வேளையிலேயே இவ்வுலக வாழ்வை நீத்துக்கொண்டார். தன் பிள்ளைகளைப் போன்றே தன்மருமக்களையும் பேரப்பிள்ளைகளையும் நேசித்த அவரது மறைவு அனைவருக்குமே பாரிய பேரிழப்பாகும்.

பொதுவாழ்வில் அவரது பங்களிப்பு வெளிப்படையாக இல்லாவிட்டாலும், அவ்விடயத்தில் அவர் தன் கணவனை என்றுமே ஊக்குவித்து வந்துள்ளார். சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தையும், அராலி அறிவொளி சமூக முன்னேற்றக் கழகத்தையும், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தையும், அமைப்பதிலும் வளர்த்துச் செல்வதிலும் இராசம்மா அவர்கள் தன் கணவரின் உந்து சக்தியாகவே விளங்கி வந்துள்ளார். இனவிடுதலைக்கான தன் கணவனின் சகல செயற்பாடுகளிலும் அவர் கணவரின் உந்து சக்தியாகவே செயற்பட்டார்.

கணவரினதும் பிள்ளைகளினதும் அன்பை, ஆதரவை, அரவணைப்பை முழுமையாகப்பெற்றுத் தன் பிற்கால வாழ்வை கனடாவிலும் ஜெர்மனியுலும் தாயகத்திலுமாக மாறி மாறிக் கழிக்கத் திட்டமிட்டிருந்த வேளையில் விதி வழமைபோல் அவர் விடயத்திலும் தன் விளையாட்டை காட்டிவிட்டது. கணவனையும் பிள்ளைகளையும் மருமக்களையும் பேரப்பிள்ளைகளையும் உறவுகளையும் நண்பர்களையும் துயரத்தில் ஆழ்த்திவிட்டு கடந்த *19.08.2000* இல் கொழும்பில் மீளாத் துயிலில் ஆழ்ந்துவிட்டார்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி சாந்தி !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலிப் பாமாலை

ஈழ வள நாட்டின் எழில் கொஞ்சும் யாழ்ப்பாணத்தில்
வழுக்கையாற்றுக்கப்பால் வயல் வெளி ஓரம்
அராலியூர்ப் பிறந்த தொல் குடிக்குடும்பம்
முருகேசு – சின்னம்மா தம்பதிகளுக்கு மகளாக
முத்தம்மா என்னும் இராசம்மா என்னும் நாமம் சூடி
அவதரித்த அம்மையே உன்னை
பூமகள் அரவணைத்துப் புன்னகை பூத்தாளே.
அராலி இந்துக்கல்லூரியில் ஆரம்பக்கல்வியைக் கற்று நீ
தராசு போல நீதி நெறி பிறழாது
பிரகாசமாக நீ வாழ்ந்து வரும் நாளில்
ஊரறிந்த பிள்ளை உனக்கே தான் என்று
சபாபதி – வள்ளியம்மை தம்பதிகளின் சற்புத்திரன்
ஆனந்தன் என்போன் மணாளனாக
இருபது வயது வரை பெற்றோர் வசமிருந்து – நீ
இருபது வயதிலிருந்து ஆனந்தன் வசமானாயே.
குறையில்லாத இல்வாழ்வில் ஆனந்தமாய் நீ
நிறைவான இல்வாழ்வை அமைத்துக் கொண்டீரே
ஏழைந்து வருடங்கள்ஆற்றிய இல்லறத்தில்
ஆண்மக்கள் நால்வர் பெண் மகவு ஒன்றும்
பேரப் பிள்ளைகள் மூன்றும் கண்டு பெருமை கொண்டீரே.
இராசம்மா எனும் உன் நாமத்தின்
'இராச' எனும் நாமத்தை முன்னடையாகக் கொண்டு
இராசமோகன், இராசகுமார், இராசசேகர், இராசலிங்கம் எனும் புத்திரரையும்
சுகந்தினி எனும் அருமைப் புதல்வியையும் கொண்டு
குடும்பம் எனும் கோயிலை அமைத்த வேளை
பவானி சியாமளா என்போரை மருமக்களாய்
பவனியில் தேர்ந்தெடுத்து முதலிரு புதல்வருக்கும்
திருமணம் பார்த்துத் திருப்தி கொண்டீரே
ஏக புதல்வி சுகந்தினியை புலேந்திரனுக்கு
மணமுடித்து வைத்துப் பார்த்து மகிழ்ந்தீரே
விதுஷா "அலெக்ஷன் கிரிசாந்த் என மூவர்
பேர மக்கள் என்றுனக்குப் பெருமை கொண்டீரே.
ஆண் மக்கள்அனைவரையும கனடாவுக்கனுப்பி நீவிர்
ஆனந்தமாய் வாழ வழிசமைத்திட்டீரே
தொழில் அதிபனாய் அன்று கொழும்பு டாம் வீதியில்
தொழில் பல வழங்கிய தொழில் நிறுவனத்தை
உன் கணவன் நடாத்திய வேளை நீரும்
தோளுக்குத் தோளாக பக்கபலமாயிருந்தீரே – அவ்வேளை
உமக்கென்றோர் மணிமண்டபம் அராலியில் அமைத்தீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் காலம் நீங்கள்இருவரும் சேர்ந்து
சமாசக் கூட்டம் நடாத்த இடம் கொடுத்து
சமூகப் பணிகள் பல ஆற்றியதோடன்றி
விருந்தோம்பி உற்றார் உறவினரை அணைத்திட்ட பெருமையை
ஊர்மக்கள் யாவரும் உணர்வார் தானே.
எண் பதில் தாபித்த சமூக எழுச்சி இயக்கத்தையும்
எண்பத்தொன்றில் தாபித்த சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தையும்
தொண்ணூற்று மூன்றில் கல்வி–புனர்வாழ்வு அபிவிருத்தி நிதியத்தையும்
முன்னோடியாய் நின்று வளர்த்தெடுத்த மூத்த தலைவர்களில் ஒருவராய்
உன் கணவன் "அராலி ஆனந்தன்" ஆற்றிய சமூகப்பணி அனைத்துக்கும்
மனைவி என்ற அந்தஸ்தில் தோள் கொடுத்துதவி
காத்திரமான உன் பங்களிப்பை ஆற்றி உதவினீரே
உன் கணவன் புகழ் பரவ மனைவியாய், தாயாய்
குடும்பம் எனும கோயிலில் தீபமாய் பிரகாசித்தீரே.
நம்மவர் மனதிலே நீ ஓர்அணையாத தீபம்
இத்தகைய சிறப்பாய் நீ வாழ்க்கை எனும் நாடக மேடையில்
இராசம்மா எனும் நாமத்தில் பாத்திரமேற்று
உன் பங்கை சிறப்பாக நடித்து நீ
ஆண்டவன் கட்டளையை ஏற்று மேடை இறங்கி
இரண்டாயிரம் ஆண்டு ஆவணி பத்தொன்பதில்
இக வாழ்வை முடித்துப் பரவாழ்வு தேடி
நம்மை விட்டுப் பிரிந்து செல்லும் வேளை – உன்
பூதவுடலை நாம் தகனம் செய்தாலும்
புகழுடம்பு எந்நாளும பூத்துக்குலுங்குமே!
தில்லைச் சிவனின் திருப்பாதங்கள் இணைந்துந்தன்
ஆத்ம சாந்தி அடைய வேண்டுமென்றும்
உன் பிரிவு தாளாது துயருறும் உன் குடும்பம்
சாந்தியடைந்து மன அமைதிகாணவும்
எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்தித்து
மலர் தூவி நாம் வணங்கி நிற்போம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும்**
**புனர்வாழ்வு – கல்வி அபிவிருத்தி நிதியமும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலிப்பதி அமரர் திருமதி இராசம்மா ஆனந்தன்
# ஞாபகார்த்த புலமைப் பரிசில் நிதியம்

கல்வித்தானம் ஒரு சிறந்த புண்ணியதானமாகும்; பிரிந்த அன்பு நெஞ்சங்களின் ஆத்ம சாந்திக்கு புண்ணியம் சேர்க்கும் தானமாகும்; பூதவுடல் அழிந்தாலும் புகழ் நாமம் நீங்காத நினைவாக நிலைக்கச்செய்யும் தானமாகும்; நிதியம் வழங்கியோர்க்கும் தரும பலனளிக்கும் தானமாகும்.

**திரு.ச.ஆனந்தன் அவர்களும், பிள்ளைகளும்இணைந்து "திருமதி இராசம்மா ஆனந்தன், ஞாபகார்த்தப்புலமைப் பரிசில் நிதியம்" ஒன்றை அன்னையாரின் 31ம் நாள் நினைவு அஞ்சலி தினமான இன்று (18.03.2000) தாபித்ததின் மூலம் சான்றோரால் போற்றப்படும் கல்வித்தானம் வழங்கிய பெருமைக்குரியவராவர்.**

இந் நிதியத்தின் ஆரம்ப நன்கொடை ரூபா 10,000/- ஆகும். கணிசமான அளவால் இத் தொகையை அதிகரித்து அன்னையின் பெயரால் கல்வி மேம்பாட்டுக்கு காத்திரமான பங்களிப்புச் செய்ய நன்கொடையாளர் விருப்பம் கொண்டுள்ளமை எங்களுக்கு ஊக்கம் அளிக்கிறது.

**அமரரின் ஒத்துழைப்புக்களையும் நற்பண்புகளையும் நன்றி உணர்வுடன் நினைவு கூருகிறோம். நன்கொடையை நன்றி அறிதலுடன் ஏற்றுக் கொள்கிறோம்.**

இங்ஙனம்
**பணிப்பாளர் சபை**
**புனர்வாழ்வு-கல்வி அபிவிருத்தி நிதியம்**

18.09.2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வு – கல்வி அபிவிருத்தி நிதியம்
## ஞாபகார்த்தப் புலமைப் பரிசில் நிதிகள்

| ஞாபகார்த்தத்துக்குரியவர் | நிதி வழங்குனர் | நன்கொடைத் தொகை |
|---|---|---|
| 1. மாவையூர் முருகேசு கற்பகம் தம்பதியினர் | இ.மு. நாகலிங்கம் – மகன் | 11,000 .00 |
| 2. உரும்பிராயூர் வீரகத்தி – சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினர் | எஸ்.வி.தம்பையா – மகன் | 10,000 .00 |
| 3. நாச்சிமார் கோவிலடியூர் கந்தையா வேலுப்பிள்ளை | வே. ஈஸ்வரன் – மகன் | 15,000 .00 |
| 4. நுணாவிலூர் சின்னத்தம்பி குலசேகரம் | திருமதி நா.தங்கம்மா – சகோதரி<br>திருமதி இ. குலசேகரம் – மனைவி | 10,000 .00 |
| 5. மாவையூர் காத்திகேசு கதிராசி தம்பதியினர் | தா. வையிரவப்பிள்ளை – மருமகன் | 5,000 .00 |
| 6. மாவையூர் பொன்னர் செல்லாச்சி தம்பதியினர் | பொ. கந்தையா – மகன்<br>பொ. செல்லத்துரை – மகன்<br>பொ. வைரமுத்து – மகன் | 15,000 .00 |
| 7. இளவாலையூர் வேலுப்பிள்ளை கிருஷ்ணர் | எம். நடராசா – மருமகன் | 5,000 .00 |
| 8. அராலியூர் நாகமணி இலட்சுமி தம்பதியினர் | நா. ஜெயக்குமார் – மகன் | **30,000 .00** |
| 9. அல்லாரையூர் கதிர்காமு சின்னம்மா தம்பதியினர் | க. சின்னத்துரை – மகன் | 5,000 .00 |
| 10. அராலியூர் சபாபதி வள்ளியம்மை தம்பதியினர் | ச. ஆனந்தன் – மகன்<br>ச. ரவீந்திரன் – மகன்<br>ச. கனகசபை – மகன் | **1,16,886 .00** |
| 11. மாவையூர் பொன்னர் மீனாட்சி தம்பதியினர் | பொ. சுப்பிரமணியம் – மகன் | 5,000 .00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஞாபகார்த்தத்துக்குரியவர் | நிதி வழங்குனர் | நன்கொடைத் தொகை |
|---|---|---|
| 12. நெல்லியடியூர் திருமதி சின்னத்தம்பி | சி. சிவானந்தம் - மகன் | 16,750 .00 |
| 13. நாவற்குழியூர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி | சி. இராசலிங்கம் - மகன் | 5,000 .00 |
| 14. கட்டுவனூர் ஐயம்பிள்ளை யோகம்மா | மகேந்திரன் - மருமகன் | 5,000 .00 |
| 15. கோண்டாவிலூர் சபாபதி செல்லம்மா தம்பதியினர் | ச. சின்னையா - மகன்<br>சி. மோகன் - பேரன்<br>சி. றமேஸ் - பேரன் | **51,000 .00** |
| 16. அச்செழுவூர் செல்வி தங்கவேலு அனுசா | க. தங்கவேலு - தந்தை | 10,000 .00 |
| 17. அராலியூர் சின்னத்தம்பி சின்னத்தங்கம் தம்பதியினர் | திருமதி ஜெயலட்சுமி பூரணச்சந்திரன் - மகள் | 10,000 .00 |
| 18. மூளாயூர் வேலு ராமு | இ. குணரத்தினம் - மகன் | 5,000 .00 |
| 19. மாவையூர் பொன்னர் கந்தையா | க. சிவஞானம் - மகன் | **50,000 .00** |
| 20. சாவகச்சேரி சங்கத்தானையூர் திருமதி சின்னம்மா இராசரத்தினம் | த. இராசரத்தினம் - கணவர் மக்கள் | 15,000 .00 |
| 21. தையிட்டியூர் செல்வி சிவஞானம் சத்தீசா | சி. லுகுணதாஸ் - சகோதரன் | 5,000 .00 |
| 22. பன்னாலையூர் கார்த்தி சுப்பிரமணியம் | சு. சர்வேஸ்வரன் - மகன் | 10,000 .00 |
| 23. கோண்டாவிலூர் சின்னத்தம்பி சுப்பிரமணியம் | சு. பாஸ்கரன் - மகன் | 10,000 .00 |
| 24. நாவற்குழியூர் முருகர் பரமு | செல்வநாயகம் ருக்குமணி - மகள் | 10,000 .00 |
| 25. நாவற்குழியூர் கணபதிப்பிள்ளை சின்னம்மா தம்பதியினர் | க. பொன்னுத்துரை - மகன் | 10,000 .00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஞாபகார்த்தத்துக்குரியவர் | நிதி வழங்குனர் | நன்கொடைத் தொகை |
|---|---|---|
| 26. மாவையூர் பொன்னர் செல்லத்துரை | செ. சிவநேசன் – மகன்<br>செ. ஜெகதீசன் – மகன்<br>செ. ஜெகதாசன் – மகன் | 10,000 .00 |
| 27. நாவற்குழியூர் கந்தையா இராசப்பிள்ளை தம்பதியினர் | க. செல்வராசா – மகன்<br>க. தங்கம்மா – மகள்<br>ச. இராசமலர் – மகள் | 10,000 .00 |
| 28. காங்கேசன்துறையூர் சிதம்பரப்பிள்ளை தங்கம்மா தம்பதிகள் | சி. தம்பிராசா – மகன்<br>சி. நவரத்தினம் – மகன்<br>சி. மார்க்கண்டு – மகன்<br>சி. மனோகரராஜா – மகன்<br>சி. இராசரத்தினம் – மகன் | **50,000 .00** |
| 29. மாவையூர் செல்வி சிதம்பரப்பிள்ளை செல்வராணி | ப. சிதம்பரப்பிள்ளை தந்தை | 5,000 .00 |
| 30. காரையூர் கந்தையா அம்பலம் | அ. ஜெயதீசன் – மகன் | 10,000 .00 |
| 31. கட்டுவனூர் நாகலிங்கம் தம்பிராசா | நா. தருமராசாவும் சகோதரர்களும் | 10,000 .00 |
| 32. புத்தூர்பதி சரவணை வயிரமுத்து (மந்திரி) | பிள்ளைகள் | 10,000 .00 |
| 33. அராலிப்பதி திருமதி இராசம்மா ஆனந்தன் | ச. ஆனந்தன் – கணவர்<br>ஆ. இராசமோகன் – மகன்<br>ஆ. இராசகுமார் – மகன்<br>ஆ. இராசசேகர் – மகன்<br>ஆ. இராசலிங்கம் – மகன்<br>சுகந்தினி புலேந்திரன் – மகள் | 10,000 .00 |
| | | |
| திரண்ட மொத்தம் | | **5,55,636 .00** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகிறோம்

நாம் வெளிநாட்டில் இருந்தவேளை நோய்வாய்ப்பட்டிருந்த எம் அன்பு அன்னைக்கும் அவருடனிருந்த எம் அன்புத் தந்தைக்கும் பல்வேறு வழிகளில் உதவிய எம் அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எம் மனப்பூர்வமான, ஆழமான நன்றியைத் தெரிவுத்துக் கொள்கின்றோம்.

விசேடமாக எம் தாயார் நோய்வாய்ப்பட்டிருந்த காலந்தொட்டு இன்றுவரை வைத்தியம், பராமரிப்பு, இறுதிக்கிரியை, ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் அத்தனையிலும் எமக்கு உற்றதுணையாக, சிறந்த வழிகாட்டியாக முழுப்பொறுப்பும் ஏற்றுச் செயற்பட்ட பெருந்தகையான புனர்வாழ்வு – கல்வி அபிவிருத்தி நிதியத்தின் தலைவரும் எம் சமூகத்தின் எழுச்சித் தந்தையுமான திரு. இ.மு.நாகலிங்கம் அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நாம் சிரம்தாழ்த்தி எம் நன்றியை மிகப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எம் அன்னை சுகயீனப்பட்டிருந்தவேளை அவரை தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் உள்ள அப்பலோ மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று வைத்தியம் செய்வதற்கு எம் தந்தைக்கு பேருதவி புரிந்ததுமட்டுமன்றி, அன்னையாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் கூறி அஞ்சலி செலுத்திய தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் திரு. மாவை சேனாதிராசா, திரு. வீ. ஆனந்தசங்கரி ஆகியோருக்கும் எம் ஆழ்ந்த அன்பையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எம் அன்னை மரணித்த நாள் தொடக்கம் இறுதிக் கிரியை வரை பல்வேறு விடயங்களிலும் எமக்குப் பேருதவி வழங்கியதுடன்இறுதி நாளில் மலர் வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தி, ஆரம்பம் தொடக்கம் இறுதி வரையான நிகழ்வுகளை ஒழுங்கமைத்து நடாத்தி உதவிய புனர்வாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர்களுக்கும் எம் நன்றியை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எம் அன்பு அன்னை மரணித்த நாள்தொடக்கம இறுதிக் கிரியை வரையிலான ஆறு நாட்களும் அதற்குப் பின்பும், எமக்கு ஆறுதல் கூறி, ஒத்தாசை புரிந்த, எம் மரியாதைக்குரிய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எம் ஆழ்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறுதிக் கிரியையின்போதும், அன்னையாரின் சரீரம் ஆறு நாட்கள்வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த காலத்திலும் வருகை தந்து எமக்கு ஆறுதல் அளித்ததுடன் அன்னையின் இறுதி யாத்திரையை, இறுதிக் கிரியைகளை சிறப்பித்துக் கௌரவித்த அனைவருக்குமே எம் அன்பான பணிவான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.


வெளி நாடுகளிலிருந்தும், இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களிலிருந்தும் நேரில் வருகை தர முடியாத நிலையில் தொலைத்தொடர்புகள் மூலம் தம் அஞ்சலிகளையும் அனுதாபங்களையும் தெரிவித்து எம் துன்பத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எம் ஆழ்ந்த நன்றியை பணிவன்புடன்தெரிவித்துக் கொள்கின்றோம்.

அனைவருக்கும் எம் நன்றி!

இங்ஙனம்
நன்றி கூறும்
**கணவன்**
**பிள்ளைகள் – மருமக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அராலிப்பதி

# அமரர் திருமதி இராசம்மா ஆனந்தன்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டி

புனர்வாழ்வு – கல்வி அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர்களின்

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

பிறந்த உயிர் கலந்து உறவி கொண்டு
மறந்திடா வண்ணம் இறைக்கடனீந்து
துறந்திட வாழ்வின் துணையுடன்அறம் காத்து
பிறந்திடும் உயிர் வீழ்ந்திடும் தேகம்.

தேகமுடன் திகழ் புகழும் உரமாக்கி திறமுடன்
பாகமான புணர்ந்தீசன் மலரடி செல்வதற்கு
ஆகமமும் ஓதி நின்று அவனியில் நின்றுலாவி
மோகமறுத்து இறைபாதம் சேர்ந்ததுவே இந்நாளில்

உறவுகள் முடியாமல் மறந்திட சுற்றி நின்று
பறந்திட்ட உயிரதனை பெருமூச்சாகப்பார்த்து
உறங்கும் உடலதற்கு கண்ணீரால் மலர் தூவி
பிறந்திடு எம்முடன் என பேர் சொல் அழுவரே.

சிந்தை கலங்கிட கதறி மனமே நோக உன்
முந்தை வினையறுத்து பறந்திட்டீர் மனம் நோக
விந்தை உலகில் இதுதான் நியதியோ என நாம்
எந்தை ஈசனடி போற்றிடுவோம் காலமெலாம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

இங்ஙனம்

| | | |
|---|---|---|
| 1. ஆர். எம். நாகலிங்கம் | 2. ச. ஆனந்தன் | 3. கி கணேஸ் |
| 4. க. மாயாதிரவியம் | 5. எஸ்.வீ.தம்பையா | 6. நா. தங்கவடிவேல் |
| 7. க. சுப்ரமணியம் | 8. இ.குணரத்தினம் | 9. சீ.செல்லத்துரை |
| 10. க. பாலசிங்கம் | 11. செ. ஜெகதாசன் | 12. க. தம்பிராசா |
| 13. சி. தம்பிராசா | 14. பே. வின்சன்ற் | 15. சோ. முருகேசு |

**பணிப்பாளர்கள் : புனர்வாழ்வு – கல்வி அபிவிருத்தி நிதியம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய். எதற்காக நீ அழுகிறாய் ?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு ?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்".

**பகவான் ஸ்ரீ கிருஸ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org